தொகுதி 7 – கடன் அறிக்கை (கிரெடிட் ரிப்பொர்டிங்) செயற்பாட்டுத் தாள் 7-9

கடன் மதிப்பெண் நிலவரம்

நிலவரம் #1: ஜோன்

ஜோனிடம் மூன்று கிரெடிட் கார்டுகள் உள்ளன. அவரது கடன் வரம்பும் கட்ட வேண்டிய தொகையும் இதோ:

கார்ட்	வரம்பு	பலன்ஸ் (கட்ட வேண்டிய தொகை)
சியர்ஸ்	$1000	$999
வீசா	$5000	$5500
மாஸ்டர் கார்ட்	$3500	$3000

ஜோன் கட்டணச் சீட்டுகளில் இருக்கும் கட்டவேண்டிய திகதிகளை கண்காணிப்பதில்லை. பதிலாக, மாதத்தின் நடுப்பகுதியில் சம்பளம் கிடைத்த சில நாட்களுக்குப் பின் ஒரு கட்டணத்தை அனுப்பி வைப்பார்.

நிலவரம் #2: அமிர்

அமிர் தனது கடன் வரலாற்றை (கிரெடிட் ஹிஸ்டரி) கட்டியெழுப்பவேண்டிய அவசியத்தைப் புரிந்துகொண்டதால், அவர் கனடாவிற்கு வந்ததிலிருந்து நான்கு கிரெடிட் கார்டுகளுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொண்டார். வட்டி கட்டும் விஷயத்தை அவர் விரும்பாததால், அவற்றில் ஒன்றையும் அவர் உபயோகிக்கவில்லை. எல்லாவற்றிற்கும் பணமாக செலுத்துவதைக் குறித்து அவர் பெருமைப் படுகிறார். அமிரும் அவரது மனைவியும் ஒரு வீடு வாங்குவதைப் பற்றி யோசிக்கிறார்கள். மோட்கேஜ் விண்ணப்பம் செய்வதற்காக அவர்கள் விரைவில் வங்கிக்குச் செல்வார்கள்.

நிலவரம் #3: யின்

கடந்த வருடம் தான் அடையாளத் திருட்டுக்கு (ஐடென்டிடி தெஃப்ட்) ஆளாகியிருப்பதை யின் அறிந்துகொண்டார். தான் எப்போதுமே விண்ணப்பித்திராத கிரெடிட் கார்டுகளுக்கான கட்டணசீட்டுகளை அவர் பெற்றுக்கொள்ள ஆரம்பித்தார். கட்டனச் சீட்டுகளையும், அதன் பின்னால் வந்த வசூலிப்பிற்கான தொலைபேசி அழைப்புக்களையும் அவர் பொருட்படுத்தாதிருந்தார்.

நிலவரம் #4: சாரா

சாராவிடம் ஐந்து கிரெடிட் கார்டுகளையும், ஒரு செல்ஃபோன் திட்டத்தையும், கம்பியூட்டர் வாங்கியதற்கான வாடிக்கையாளர் கடனும் (கன்சியூமர் லோன்) இருந்தது. கடந்த வருடம் சாரா தன் வேலையை இழந்துவிட்டார். அவர் வேலை தேடிக்கொண்டிருந்த சமயத்தில் சோசியல் அசிஸ்டன்ஸ் (சமூக உதவி) பெற்றுக்கொண்டிருந்தார். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மட்டுமே ஆகக் குறைந்த கட்டணத்தைச் சுழற்சி முறையில் செலுத்தி வந்தார். த னது செல்ஃபோன் கொன்ட்ராக்டை ரத்து செய்தார், ஆனால் ரத்துசெய்வதற்கான கட்டணம் $200 ஐ கட்டவேண்டியிருந்தது. அதை அவரால் செலுத்த முடியவில்லை என்பதால் அது வசூலிப்புக்குச் (கலெக்ஷன்) சென்று விட்டது.